உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## பேச்சு

## அதிமேற் பிரிவு (தரம்7,8,9)

## சிறுவர் தின விழா

பாடசாலைகளில் "சிறுவர் தின விழா" கொண்டாடப்படுவது வழக்கமாகும்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை அப்பாவும் அம்மாவும் என்னை பாடசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

பாடசாலை வாசலில் "சிறுவர் தின விழா" என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.

வாசலில் நின்ற ஆசிரியர்கள் எங்களை இன்முகத்துடன் வரவேற்றனர்.

மைதானத்தின் நடுவில் ஒரு அழகிய மேடை அமைக்கப்பட்டிருந்தது.

சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் போன்ற பல நிறங்களில் பலூன்கள் கட்டப்பட்டிருந்தன.

மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஆசனங்களில் நாங்கள் அமர்ந்தோம்.

பெற்றோர்களுக்கென தனியாக இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

அவற்றில் மாணவர்களின் பெற்றோர்கள் அமர்ந்திருந்தனர்.

அதிபரும் பெரியவர்களும் மேடையில் அமர்ந்திருந்தனர்.

அதிபர் தனது உரையில் சிறுவர் தினம் கொண்டாடப்படும் அவசியம் பற்றிக் குறிப்பிட்டார்.